ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த
# ॥ சிறிய திருமடல் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font. Our sincere thanks to **Smt. Vasundara Ramarajan** for proofreading the document.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ சிறிய திருமடல் ॥

முள்ளிச் செழுமலரோ தாரான் முளைமதியம்⋆
கொள்ளிக்கென் உள்ளம் கொதியாமே⋆-வள்ளல்
திருவாளன் சீர்க்கலியன் கார்க்கலியை வெட்டி⋆
மருவாளன் தந்தான் மடல்

‡காரார் வரைக் கொங்கை கண்ணார் கடல் உடுக்கை⋆
சீரார் சுடர்ச் சுட்டி செங்கலுழிப் பேராற்று⋆ (1)
பேரார மார்வின் பெருமா மழைக் கூந்தல்⋆
நீரார வேலி நிலமங்கை என்னும்⋆ இப் (2)
பாரோர் சொலப்பட்ட மூன்றன்றே⊕அம்மூன்றும்
ஆராயில் தானே அறம்பொருள் இன்பம் என்று⋆ (3)
ஆரார் இவற்றின் இடை அதனை எய்துவார்⋆
சீரார் இருகலையும் எய்துவர்⊕சிக்கென மற்று (4)
ஆரானும் உண்டென்பார் என்பது தான் அதுவும்⋆
ஓராமை அன்றே உலகத்தார் சொல்லும் சொல்⋆ (5)
ஓராமை ஆமாறது உரைக்கேன் கேளாமே⋆
காரார் புரவியேழ் பூண்ட தனி ஆழி⋆ (6)
தேரார் நிறை கதிரோன் மண்டலத்தைக் கீண்டு புக்கு⋆
ஆரா அமுதம் அங்கெய்தி⊕அதில் நின்றும் (7)
வாராதொழிவதொன்றுண்டே⋆ அதுநிற்க
ஏரார் முயல்விட்டுக் காக்கைப்பின் போவதே⋆ (8)
ஏரார் இளமுலையீர்! என்றனக் குற்றதுதான்⋆
காரார் குழல் எடுத்துக் கட்டி⊕கதிர் முலையை (9)
வாரார வீக்கி மணிமேகலை திருத்தி⋆
ஆரார் அயில்வேற்கண் அஞ்சனத்தின் நீறணிந்து⋆ (10)
சீரார் செழும்பந்து கொண்டடியா நின்றேன் நான்⋆
நீரார் கமலம் போல் செங்கண்மால் என்றொருவன்⋆ (11)

பாரோர்கள் எல்லாம் மகிழப் பறை கறங்க⋆
சீரார் குடம் இரண்டேந்தி⊕ செழுந்தெருவே (12)
ஆரார் எனச்சொல்லி ஆடும் அதுகண்டு⋆
ஏரார் இளமுலையார் என்னையரும் எல்லாரும்⋆ (13)
வாராயோ என்றார்க்குச் சென்றேன் என் வல்வினையால்⋆
காரார் மணிநிறமும் கைவளையும் காணேன் நான்⋆ (14)
ஆரானும் சொல்லிற்றும் கொள்ளேன்⊕ அறிவழிந்து
தீரா உடம்பொடு பேதுறுவேன் கண்டிரங்கி⋆ (15)
ஏரார் கிளிக்கிளவி எம்மனைதான் வந்தென்னை⋆
சீரார் செழும் புழுதிக் காப்பிட்டு⊕ செங்குறிஞ்சித் (16)
தாரார் நறுமாலை சாத்தற்கு⋆ தான் பின்னும்
நேராதன ஒன்று நேர்ந்தாள்⋆ அதனாலும் (17)
தீராதென் சிந்தை நோய் தீராதென் பேதுறவு⋆
வாராது மாமை அதுகண்டு மற்றாங்கே⋆ (18)
ஆரானும் மூதறியும் அம்மனைமார் சொல்லுவார்⋆
பாரோர் சொலப்படும் கட்டுப் படுத்திரேல்⋆ (19)
ஆரானும் மெய்ப்படுவன் என்றார்⊕ அதுகேட்டுக்
காரார் குழல் கொண்டை கட்டுவிச்சி கட்டேறி⋆ (20)
சீரார் சுளகில் சிலநெல் பிடித்தெறியா⋆
வேரா விதிர்விதிரா மெய்சிலிராக் கைமோவா⋆ (21)
பேராயிரம் உடையான் என்றாள்⊕ பெயர்த்தேயும்
காரார் திருமேனி காட்டினாள்⋆ கையதுவும் (22)
சீரார் வலம்புரியே என்றாள்⊕ திருத் துழாய்த்
தாரார் நறுமாலை கட்டுரைத்தாள் கட்டுரையா⋆ (23)
நீரேதும் அஞ்சேல்மின்! நும்மகளை நோய் செய்தான்⋆
ஆரானும் அல்லன் அறிந்தேன் அவனை நான்⋆ (24)
கூரார் வேல் கண்ணீர் உமக்கறியக் கூறுகெனோ⋆
ஆரால் இவ்வையம் அடியளப் புண்டதுதான்⋆ (25)
ஆரால் இலங்கை பொடிபொடியா வீழ்ந்தது⋆ மற்று
ஆராலே கன்மாரி காத்ததுதான்⊕ ஆழி நீர் (26)
ஆரால் கடைந்திடப் பட்டது⋆ அவன் காண்மின்
ஊரா நிரை மேய்த்துலகெல்லாம் உண்டுமிழ்ந்தும்⋆ (27)

ஆராத தன்மையனாய் ஆங்கொருநாள் ஆய்ப்பாடி⋆
சீரார் கலையல்குல் சீரடிச் செந்துவர் வாய்⋆ (28)
வாரார் வனமுலையாள் மத்தாரப் பற்றிக் கொண்டு⋆
ஏரார் இடை நோவ எத்தனையோர் போதுமாய்⋆ (29)
சீரார் தயிர் கடைந்து வெண்ணை திரண்டதனை⋆
வேரார் நுதல் மடவாள் வேறோர் கலத்திட்டு⋆ (30)
நாரார் உறியேற்றி நன்கமைய வைத்ததனை⋆
போரார் வேல் கண் மடவாள் போந்தனையும் பொய் உறக்கம்⋆ (31)
ஓராதவன் போல் உறங்கி அறிவுற்று⋆
தாரார் தடம் தோள்கள் உள்ளளவும் கை நீட்டி⋆ (32)
ஆராத வெண்ணை விழுங்கி⊕அருகிருந்த
மோரார் குடம் உருட்டி முன் கிடந்த தானத்தே⋆ (33)
ஓராதவன்போல் கிடந்தானைக் கண்டவளும்⋆
வாராத் தான் வைத்தது காணாள்⊕வயிறடித்திங்கு (34)
ஆரார் புகுதுவார் ஐயர் இவர் அல்லால்⋆
நீராம் இது செய்தீர் என்றோர் நெடும் கயிற்றால்⋆ (35)
ஊரார்கள் எல்லாரும் காண உரலோடே⋆
தீரா வெகுளியளாய்ச் சிக்கென ஆர்த்தடிப்ப⋆ (36)
ஆரா வயிற்றினோடு ஆற்றாதான்⊕அன்றியும்
நீரார் நெடும் கயத்தைச் சென்றலைக்க நின்றுரப்பி⋆ (37)
ஓராயிரம் பண வெம் கோவியல் நாகத்தை⋆
வாராய் எனக்கென்று மற்றதன் மத்தகத்து⋆ (38)
சீரார் திருவடியால் பாய்ந்தான்⊕தன் சீதைக்கு
நேராவன் என்றோர் நிசாசரிதான் வந்தாளை⋆ (39)
கூரார்ந்த வாளால் கொடி மூக்கும் காதிரண்டும்⋆
ஈரா விடுத்தவட்கு மூத்தோனை⊕வெந்நரகம் (40)
சேரா வகையே சிலை குனித்தான்⋆ செந்துவர் வாய்
வாரார் வன முலையாள் வைதேவி காரணமா⋆ (41)
ஏரார் தடந்தோள் இராவணனை⊕ஈரைந்து
சீரார் சிரம் அறுத்துச் செற்றுகந்த செங்கண் மால்⋆ (42)
போரார் நெடு வேலோன் பொன் பெயரோன் ஆகத்தை⋆
கூரார்ந்த வள் உகிரால் கீண்டு⊕குடல் மாலை (43)

சீரார் திருமார்பின் மேல் கட்டி⋆ செங்குருதி
சோராக் கிடந்தானைக் குங்குமத் தோள் கொட்டி⋆ (44)
ஆரா எழுந்தான் அரி உருவாய்⊕அன்றியும்
பேர் வாமனனாய காலத்து⋆ மூவடி மண் (45)
தாராய் எனக்கென்று வேண்டிச் சலத்தினால்⋆
நீரேற்றுலகெல்லாம் நின்றளந்தான் மாவலியை⋆ (46)
ஆராத போரில் அசுரர்களும் தானுமாய்⋆
காரார் வரை நட்டு நாகம் கயிறாக⋆ (47)
பேராமல் தாங்கிக் கடைந்தான்⊕திருத் துழாய்த்
தாரார்ந்த மார்வன் தட மால் வரை போலும்⋆ (48)
போரானை பொய்கைவாய்க் கோட்பட்டு நின்றலறி⋆
நீரார் மலர்க் கமலம் கொண்டோர் நெடும் கையால்⋆ (49)
நாராயணா! ஓ மணிவண்ணா! நாகணையாய்⋆
வாராய்! என் ஆரிடரை நீக்காய்⊕என வெகுண்டு (50)
தீராத சீற்றத்தால் சென்றிரண்டு கூறாக⋆
ஈரா அதனை இடர் கடிந்தான் எம்பெருமான்⋆ (51)
பேராயிரம் உடையான் பேய்ப் பெண்டீர் நும்மகளை⋆
தீரா நோய் செய்தான் என உரைத்தாள்⊕சிக்கென மற்று (52)
ஆரானும் அல்லாமை கேட்டெங்கள் அம்மனையும்⋆
போரார் வேல் கண்ணீர்! அவனாகில் பூந்துழாய்⋆ (53)
தாராதொழியுமே தன் அடிச்சி அல்லளே!⋆ மற்று
ஆரானும் அல்லனே என்றொழிந்தாள்⊕நான் அவனைக் (54)
காரார் திருமேனி கண்டதுவே காரணமா⋆
பேராப் பிதற்றாத் திரிதருவன்⊕பின்னையும் (55)
ஈராப் புகுதலும் இவ்வுடலைத் தண் வாடை⋆
சோரா மறுக்கும் வகை அறியேன்⊕சூழ் குழலார் (56)
ஆரானும் ஏசுவர் என்னும் அதன் பழியை⋆
வாராமல் காப்பதற்கு வாளா இருந்தொழிந்தேன்⋆ (57)
வாராய் மட நெஞ்சே! வந்து⊕மணிவண்ணன்
சீரார் திருத் துழாய் மாலை நமக்கருளி⋆ (58)
தாரான் தரும் என்றிரண்டத்தில் ஒன்றதனை⋆
ஆரானும் ஒன்னாதார் கேளாமே சொன்னக்கால்⋆ (59)

ஆராயும் ஏலும் பணிகேட்டதன்றெனிலும்⋆
போராதொழியாதே போந்திடு நீ என்றேற்கு⋆ (60)
காரார் கடல் வண்ணன் பின் போன நெஞ்சமும்⋆
வாராதே என்னை மறந்ததுதான்⋆ வல்வினையேன் (61)
ஊரார் உகப்பதே ஆயினேன்⊕ மற்றெனக்கிங்கு
ஆராய்வார் இல்லை அழல் வாய் மெழுகு போல்⋆ (62)
நீராய் உருகும் என்னாவி⊕ நெடுங்கண்கள்
ஊரார் உறங்கிலும் தாம் உறங்கா⋆ உத்தமன் தன் (63)
பேர் ஆயினவே பிதற்றுவன்⋆ பின்னையும்
காரார் கடல் போலும் காமத்தர் ஆயினார்⋆ (64)
ஆரே பொல்லாமை அறிவார் அது நிற்க⋆
ஆரானும் ஆதானும் அல்லள் அவள் காணீர்⋆ (65)
வாரார் வனமுலை வாசவதத்தை என்று⋆
ஆரானும் சொல்லப் படுவாள்⊕ அவளும் தன் (66)
பேராயம் எல்லாம் ஒழியப் பெரும் தெருவே⋆
தாரார் தடந்தோள் தளைக் காலன் பின் போனாள்⋆ (67)
ஊரார் இகழ்ந்திடப் பட்டாளே⊕ மற்றெனக்கிங்கு
ஆரானும் கற்பிப்பார் நாயகரே⋆ நான் அவனைக் (68)
காரார் திருமேனி காணும் அளவும் போய்⋆
‡சீரார் திருவேங்கடமே திருக்கோவல் (69)
ஊரே⋆ மதிள் கச்சி ஊரகமே பேரகமே⋆
பேரா மருதிறுத்தான் வெள்ளறையே வெஃகாவே⋆ (70)
பேராலி தண்கால் நறையூர் திருப்புலியூர்⋆
‡ஆராமம் சூழ்ந்த அரங்கம்⊕ கணமங்கை (71)
காரார் மணி நிறக் கண்ணனூர் விண்ணகரம்⋆
சீரார் கணபுரம் சேறை திருவழுந்தூர்⋆ (72)
காரார் குடந்தை கடிகை கடல் மல்லை⋆
ஏரார் பொழில் சூழ் இடவெந்தை நீர்மலை⋆ (73)
சீராரும் மாலிரும் சோலை திருமோகூர் ⊕
பாரோர் புகழும் வதரி வடமதுரை⋆ (74)
ஊராய எல்லாம் ஒழியாமே நான் அவனை⋆
ஓர் ஆனை கொம்பொசித்தோர் ஆனை கோள்விடுத்த (75)

சீரானை⋆ செங்கண் நெடியானைத் தேன்துழாய்த்
தாரானை⋆ தாமரை போல் கண்ணானை⋆ எண் அருஞ்சீர் (76)
பேர் ஆயிரமும் பிதற்றி⊕பெரும் தெருவே
ஊரார் இகழிலும் ஊராதொழியேன் நான்⋆ (77)
வாரார் பூம் பெண்ணை மடல்⊕

ஊராதொழியேன் உலகறிய ஒண் நுதலீர்!⋆
  சீரார் முலைத் தடங்கள் சேரளவும்⋆-பார் எல்லாம்
அன்றோங்கி நின்றளந்தான் நின்ற திருநறையூர்⋆
  மன்றோங்க ஊர்வன் மடல்⊕

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥